இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb. 1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 | இதழ் : 13 | திகதி : 06.08.2023 | விலை : 50.00

# வரலாற்றின் வடுக்களைத் தாங்கி சவால்களுடனும் வாழ்வின் பல பிரச்சினைகளுடனும் வட பகுதி மக்கள் இன மத வேறுபாடுகளின்றி ஒற்றுமையுடனும் மன மகிழ்வுடனும் வாழ்கின்றனர்

–யாழில் திருத்தந்தையின் பிரதிநிதி–





அப்போஸ்தலிக்க மேய்ப்புப்பணிப் பயணமாக யாழ் மறைமாவட்டத்திற்கு வருகைதந்த திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி பிறாயன் உடக்வே ஆண்டகை அவர்கள் யாழ்.மறைமாவட்டத்தில் கடந்த யூலை 24ம் திகதி முதல் யூலை 27ம் திகதி வரை தங்கியிருந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றுப் பல இடங்களையும் தரிசித்தார்.

அப்போஸ்தலிக்க பயணத்தின் நிறைவில் பாதுகாவலனுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே பேராயர் பிறாயன் உடக்வே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்மேலும் தெரிவிக்கையில் நான் யாழ். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பல இடங்களுக்குச் சென்று பல நிகழ்வுகளில் பங்கேற்றேன். நல்லூர் இந்து ஆலயம், யாழ் பல்கலைக்கழகம், முள்ளிவாய்க்கால் போன்ற இடங்களில் மக்களின் உணர்வுகளை நேரில் கண்டுணர்ந்தேன். தமிழ் மக்கள் தமக்குள் சொல்லொணாத்துன்பங்களைச் சுமந்து வாழ்ந்தாலும் தமக்குள் ஒற்றுமையாய் வாழ்வது மன மகிழ்ச்சியைத் தருகின்றது. இம் மக்களின் இன்றைய வாழ்வியல் துன்பங்களையும், அவர்களின் விசுவாச வாழ்வையும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு அறிவிப்பேன். அவரின் ஆசீர் என்றும் உங்களுடன் இருக்கும் என்றார்.

## வெள்ளிவிழாக் காணும் எம் குருக்கள்

யாழ் மறைப்பூங்காவிலே
குருக்களாய் மலர்ந்து
இருள் பிணி நீக்கிட
அருட்பணியாளர்களாய்
பணிக்குருத்துவத்தில்
ஆண்டுகள் இருபத்தைந்து
கண்டு
வெள்ளி விழாவில் மகிழ்வுறும்
எம் குருக்களுக்காய்
இறைவா உமக்கு
எமது நன்றிகள்


அருட்பணி. எமில் போல்


அருட்பணி. செ. செபநேசரட்ணம்


அருட்பணி.
அ. பிரான்சிஸ் ஜெயசீலன் செ.தா

பாதுகாவலன் வாசக
நெஞ்சங்கள் சார்பாக
வெள்ளி விழாக்காணும்
எம் குருக்களை வாழ்த்தி
மகிழ்கின்றோம்
-பாதுகாவலன் குடும்பம்-

## திருத்தந்தையின் பிரதிநிதி யாழ். பல்கலைக்கு விஜயம்



திருத்தந்தையின் இலங்கைக்கான திருத்தூதுப் பிரதிநிதி பேரருட்தந்தை பிறைன் உடக்வே அவர்கள் கடந்த 26ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற் குணராஜா, முன்நாள் துணை வேந்தர் பாலசுந்தரம்பிள்ளை, கிறிஸ்தவ நாகரீகத்துறைத் தலைவர் பேராசிரியர் அருட்தந்தை போல் றொகான் அடிகளார், பணியாளர்கள் மற்றும் மாணவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

## இனப்போர் ஏற்படுத்திய காயங்களிலிருந்து மீள மன்னிப்போம் மறப்போம்

### முள்ளிவாய்க்காலில் திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி தெரிவிப்பு



பேராயர் பிறாயன் உடக்வே ஆண்டகை அவர்கள் முள்ளிவாய்க்கால் சென்று, போரில் இறந்தோருக்கு அஞ்சலி செலுத்தி, போரினால் பாதிக்கப்பட்டோரைச் சந்தித்து உரையாடினார். போரினால் பாதிக்கப்பட்டோர் மத்தியில் பேசும்போதே ஆண்டகை அவர்கள் இனப்போர் ஏற்படுத்திய காயங்களிலிருந்து மீள எழவேண்டும், அதற்கு நாம் எமக்கு எதிராகச் செயற்பட்டவர்களை மன்னிக்க வேண்டும். எமக்குள் குரோத உணர்வு இருப்பின் அவற்றைக் களைந்து, மன்னித்து, மறந்து வாழ்வதே கிறிஸ்தவ சாட்சிய வாழ்வாகும் எனக்குறிப்பிட்டார்.

இனப்போரின் தாக்கத்தைக் கேள்வியுற்றிருந்தேன், இன்று இப்போதுதான் நான் முதல் முறையாகப் பாதிக்கப்பட்ட அங்கவீனர்களான உங்களையும், உறவுகளை இழந்த அனாதைகளையும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளையும் சந்தித்து உரையாடும்போது என் நெஞ்சம் வருத்தத்தில் உள்ளது என்றார்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## பேராயர் பிறாயன் உடக்கே நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு விஜயம்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி பிறாயன் உடக்வே, கடந்த வாரம் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்றமை ஈழத்தமிழ் மக்களின் பண்பாடு கலாசாரம், மரபுரிமை என்பதற்கான மிகப் பெரும் மரியாதையாகவே நோக்க வேண்டும்.

ஈழத்தமிழர்களின் எழுபது வருட அரசியல் விடுதலைப் போராட்டம் பற்றிச் சர்வதேச அரங்கில் தமிழ்க் கத்தோலிக்க திரு அவையின் ஆயர்கள், குருக்கள். துறவிகள் குரல்கொடுத்து வரு கின்றனர்.

இப் பின்புலத்தில் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி பிறாயன் உடக்வே ஆண்டகை நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குள் சென்று வந்தமை ஈழத்தமிழர்களின் மத ரீதியான புரிதலாகும்.

அதுவும் ஈழத்தமிழ்ச் சைவப் பாரம்பரியத்தின் பிரகாரம் சைவ ஆலயங்களுக்குள் செல்ல வேண்டுமானால் ஆண்கள், தங்கள் மேலாடைகளைக் கழற்ற வேண்டும். இது சைவ மரபு.

அதுவும் நல்லூர் கோவில் நிர்வாகம் மிகவும் இறுக்கமான பண்பாட்டைக் கொண்டிருக்கிறது. எந்த ஒரு பிரமுகர் கோவிலுக்கு வந்தாலும் அவர்கள் தங்கள் மேலாடைகளைக் கழற்றிவிட்டுத்தான் கோவிலுக்கு உள்ளே செல்ல வேண்டும் என்பது நல்லூர் கோவில் நிர்வாகம் மிகக் கடுமையாகப் பின்பற்றும் ஒரு பண்பு சார் மரபு.

இந்த மரபு எச்சந்தர்ப்பத்திலும் மீறப்படுவதில்லை. இலங்கை ஜனாதிபதிகள், பிரதமர்கள். ஏன் வெளிநாட்டு இராஜதந்திரிகள் கூட நல்லூர் கோவிலின் உட்பகுதிக்குச் செல்லும்போது தங்கள் மேலாடைகளைக் கழற்றி விட்டுச் சென்றிருக்கின்றனர்.

அது மாத்திரமல்ல கோவிலுக்குள் தினமும் அந்தந்த நேரத்துக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் பூஜை வழிபாடுகள்கூட எந்த ஒரு பிரமுகரின் வருகைக்காவும் காத்திருக்காமல் உரிய நேரத்துக்கு ஆரம்பிக்கப்பட்டுவிடும்.

உரிய நேரத்துக்கு ஆரம்பிக்க வேண்டிய பூஜை வழிபாடுகள் பிரமுகர்களின் வருகைக்காக ஒரு நிமிடமேனும் தாமதிப்பதில்லை.

ஏனெனில் பூஜை ஆரம்பிப்பதற்குரிய நேரம் என்பது கடவுளுக்குரியது. அதற்காகப் பக்தர்களும் நேரத்துக்கு வருகை தந்து பயபக்தியோடு காத்திருப்பர். ஆகவே பல்வேறு வேண்டுதல்களோடு பூஜைக்காக நேரத்துடன் வருகை தந்து மூலஸ்தானத்தின் முன்பாகக் காத்திருக்கும் பக்தர்கள்தான் கோவில் நிர்வாகத்துக்கு முக்கியமே தவிர, பிரமுகர்களின் வருகை அல்ல.

இந்த மரபுப் பண்பாடு தமிழ்ச் சைவப் பண்பாட்டின் பிரதான மையம். இப் பண்பாட்டை மிகக் கடும் ஒழுக்க விதிகளோடும் பய பக்தியோடும் மிகத் தூய்மையாக நல்லூர் கோவில் நிர்வாகம் பின்பற்றி வருகின்றமை உலகம் அறிந்தது.

இருந்தும் கலாநிதி பிறாயன் உடக்வே மற்றும் யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை பி.ஜே.ஜெபரெட்ணம் அடிகள் உட்பட நானும் மேலாடைகளை அதாவது கத்தோலிக்க சமயக் குருக்களுக்குரிய உடைகளைக் கழற்றாமல் அப்படியே உள்ளே வந்து பார்வையிடுமாறு அழைக்கப்பட்டோம்.

இந்த அழைப்பும் உத்தரவும் ஈழத்தமிழ்ப் பண்பாட்டின் அதி உச்ச நிலை என்றே தமிழ்க் கத்தோலிக்கத் திருஅவை நம்புகிறது.

அதுவும் கோவிலின் முன்பக்கத்தை மாத்திரம் பார்வையிடச் சென்றிருந்த போது, அங்கு நின்ற சைவக் குரு ஒருவரே கோவிலுக்கு உள்ளே வருமாறு அழைத்திருந்தார்.

மிக அற்புதமான விசுவாசத்துடனும் கோவில் நிர்வாகம் தன்னைக் கேள்விக்கு உட்படுத்தாது என்ற மிகுந்த நம்பிக்கையோடும் தங்கள் மரபை மீறிக் கோவிலுக்குள் அழைத்தமை ஈழத்தமிழ்ச் சைவப் பண்பாட்டின் அதி உன்னதம் என்றால் அது மிகையாகது.

‘உங்கள் கோவிலுக்குள் மேலாடைகளோடு உள்ளே வர முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். கோவிலின் முன் பக்கத்தில் நின்று பார்வையிட மாத்திரமே இங்கு வந்தோம்’ என்று நான் அந்த சைவக் குருவானவரிடம் சுட்டிக்காட்டியிருந்தேன்.

ஆனால் ‘எந்தப் பிரச்சினையும் இல்லை. நீங்கள் தாராளமாக உள்ளே வந்து பார்வையிடலாம்’ என்று அந்த சைவக் குரு அன்புடன் வேண்டினார். ‘நாங்கள் எங்கள் மேலாடைகளுடன் உள்ளே வந்தால் உங்களுக்குப் பிரச்சினையில்லையா என்று மீண்டும் நான் கேட்டேன்.

இல்லை நீங்கள் வந்து பார்வையிடலாம்’ என்று அந்தக் சைவக் குரு தாராள மனதுடனும் புன்கையோடும் உள்ளே வரவழைத்தார்.

கோவிலின் உள்ளே சென்ற கலாநிதி பிறாயன் உடக்வே, ஈழத்தமிழர்களின் சமயப் புரிந்துணர்வையும், தமிழ்மொழி, ஈழத்தமிழர்களை ஒரு பண்பாட்டுக்குள் கொண்டி ருக்கிறது என்பதையும் உணர்ந்து பெருமைப்பட்டார். இப் புரிதல் தமிழ்க் கத்தோலிக்கத் திருச்சபையின் வெளிப்படைத்தன்மையையும் சமய ஒழுக்கத்தையும் உலகத்துக்குப் பறைசாற்றியிருக்கிறது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் மக்களுக்கு அளித்த ஆவியின் தூண்டுதல்களை மையமாகக் கொண்டது எமது திருஅவை. இதனால் தன்னைப் பற்றியும் தன் பணி பற்றியும் பெற்ற புத்துணர்வும் இதன் விளைவாகத் திருஅவை பிற கிறிஸ்தவச் சபைகளோடு மாத்திரமல்ல, பிற சமயத்தவரோடும், ஏன் கடவுள் நம்பிக்கையில்லாதவரோடும்கூட, திறந்த மனதோடு உரையாடத் தயங்காது என்பதையும் இது புரிய வைத்திருக்கிறது.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**



குருநகர் ஆலய அருட்பணிச் சபையினருடன் திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் பிறாயன் உடக்வே ஆண்டகையும், யாழ் ஆயர் மற்றும் குருமுதல்வர் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## பாசையூரில் தாத்தா பாட்டிகளை கௌரவிக்கும் தினம்



கடந்த ஜூலை நான்காம் ஞாயிற்றுக்கிழமையில் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளாரின் வழிநடத்தலில் தாத்தா பாட்டிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

ஞாயிறு மாலைத் திருப்பலியோடு ஆரம்பமாகிய இந்த நிகழ்வின் திருப்பலியினை யாழ் மறை மாவட்டக் குடும்ப நல வாழ்வின் இயக்குநரான அருட்பணி டேவிட் அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார்.

திருப்பலியின் நிறைவில் தாத்தா பாட்டிகளினை மகிழ்விக்கும் விதமாக சில நிகழ்வுகளும் விளையாட்டுகளும் இடம் பெற்றன. இறுதியில் அவர்களது பேரப்பிள்ளைகளால் நினைவுப்பரிசில்களும், பங்கு ஆலயத்தினால் வாழ்த்து மடலும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் நூற்றுக்கும் அதிகமான தாத்தா பாட்டியினர் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## லிஸ்பன் பல்கலைக்கழகத்தில் திருத்தந்தை

லிஸ்பன் உள்ளூர் நேரம் காலை 9 மணிக்கு இந்திய இலங்கை நேரம் பகல் 1.30 மணிக்கு பல்கலைக்கழகம் வந்தடைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பல்கலைக்கழக முதல்வரால் வரவேற்கப்பட்டார். அங்கு ஏறக்குறைய 6,500 மாணவர்கள் திருத்தந்தையுடனான சந்திப்புக்குக் குழுமியிருந்தனர். இசை முழக்கத்துடன் பல்கலைக்கழகத்திற்குள் வரவேற்கப்பட்ட திருத்தந்தை அவர்களைப் பல்கலைக்கழக முதல்வர் முதலில் வரவேற்று உரையாற்றினார். திருத்தந்தையின் லௌதாத்தோ திருமடல், உலகளாவிய கல்வி ஒப்பந்தம், பிரான்சிஸ்கோ பொருளாதாரம் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டவர்கள் மற்றும் திருத்தந்தையின் நிதி உதவியால் பயன் பெறும் இளம் பெண் போன்றோர் தங்களது சான்று வாழ்வினைத் திருத்தந்தையின் முன் பகிர்ந்து கொண்டனர். அவர்களின் பகிர்விற்குப் பின் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது இரண்டாம் நாளின் முதல் உரையான திருத்தூதுப் பயணத்தின் மூன்றாம் உரையை ஆற்றினார்.

இவ்வாறு தனது உரையை நிறைவு செய்த திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள், கூடியிருந்த அனைவரோடும் இணைந்து விண்ணகத்திலிருக்கின்ற எங்கள் தந்தையே என்ற செபத்தைச் செபித்து அதன் முடிவில் தன் அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்கினார்.

பல்கலைகழகத்திலிருந்து வெளியேறும் முன் புதிதாக கட்டப்பட இருக்கும் காம்போஸ் வெரித்தாதிஸ் (Campus Veritatis) என்னும் இடத்தின் முதல் கல்லை ஆசீர்வதித்தார் திருத்தந்தை.


1ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 23 . 05 . 1956

உதிர்வு 03 . 08 . 2022

குருத்துவ திருநிலை 28.07.1983

அமரர்

**அருட்பணி. மைக்கல் தயானந்தன் பற்றிக்**

“உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே,
என்னிடம் விசுவாசம் கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்”
(யோவான் 11:25)

பாரினில் பயணமது நிறைவுற்று நித்தியமும் இறைவனில் சங்கமமாகி ஓராண்டு கடந்த போதும் நினைவுகள் எம்மிடையே நிழலாடுகின்றன. இறைவனில் அமைதிகாண இறைவனிடம் மன்றாடுகின்றோம்

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

AD/50

# பத்திரிசிய உயர் கல்வி நிறுவனம் பத்திரிசியப் பெரும்பாகம்!

தனது தாழ்மையான ஆரம்பத்திலிருந்தே யாழ்ப்பாண மறைமாவட்டம் மறைப்பணியோடு கல்விப்பணி, மருத்துவம் உட்பட்ட பல்வேறு சமூகப் பணிகளையும் ஆற்றுவதில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றது. 1960களில் இலங்கையின் பாடசாலைகள் தேசியமயமாக்கப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் எல்லைகளுக்குட்பட்ட இடங்களில் இருந்த பாட-சாலைகளில் 60 வீதத்திற்கும் அதிகமானவை யாழ்ப்பாண மறைமாட்டத்திற்குச் சொந்தமாக இருந்தன. 1960இல் தனியார் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட பின்னரும் அரசோடு



ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் பல பாடசாலைகளை யாழ்ப்பாண மறைமாவட்டம் பகுதியளவில் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கல்விப்பணியைச் செவ்வனே ஆற்றி வருகிறது.

பிரித்தானியக் கல்வி முறைமையின் அடிப்படையில் இலங்கையும் முதல் நிலைக்கல்வி, இரண்டாம் நிலைக் கல்வி, மூன்றாம் நிலைக்கல்வி என்ற தர வரிசையில் தனது கல்வி அமைப்பைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாண மறைமாட்டத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பாடசாலைகள் இரண்டாம் நிலை வரை தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினுடைய மறுமலர்ச்சிக்குப் பின்பு பொது நிலையினரின் உருவாக்கத்திற்காக உயர் கல்வி வாய்ப்புக்களை வழங்குகின்ற முனைப்பை யாழ்ப்பாண மறைமாவட்டம் ஆரம்பித்தது. இதனடிப்படையில் ஆசிரியப் பயிற்சிக்கலாசாலையையும், டிப்ளோமா போன்ற உயர் பட்டச் சான்றிதழ்களையும், கல்வித் தகைமைகளையும் வழங்குகின்ற நிறுவனங்களை யாழ்ப்பாண மறைமாவட்டம் ஆரம்பித்தது. இதன் மூலமாக நூற்றுக்கணக்கான பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், பல்வேறு தொழில்வாண்மை உள்ள டிப்ளோமாப் பட்டதாரிகளும் உருவாக்கப்பட்டனர். இந் நிலையில் முழுமூச்சோடு மூன்றாம்நிலைக்கல்வியையும் உருவாக்க வேண்டியதன் அவசியத்தை ஒரு காலத்தின் தேவையாக உணர்ந்தது. இதன் ஓர் அங்கமாக 1979 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கிறிஸ்தவநாகரிகக் கற்கை ஓர் அலகாக அன்றைய ஆயர் மறைந்த வ. தியோகுப்பிள்ளை அவர்களின் முழு முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டது. அதைத் தவிர பத்திரிசியார் கல்லூரி நிறுவனம், தூய வளனார் துறவறசபையின் வளனார் நிறுவனம் ஆகியவற்றின் மூலம் தொழில் முன்னிலைப்பாடநெறிகளில் டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கை நெறி களும் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் 1981 இல் உருவாக்கப்பட்ட புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி குருத்துவப் பயிற்சி பெறும் மாணவர்களிற்கு மெய்யியல் மற்றும் இறையியல் துறைக-ளில் ஆரம்பத்தில் டிப்ளோமா பட்டத்தையும் பின்னர் இளமாணிப் பட்டங்களையும் உரோமைய ஊர்பானியா பல்கலைக் கழகத்தின் அனுசரணையுடன் ஆரம்பித்தது. 1930களில் இருந்து யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் மருத்துவப்பணியாற்றும் திருச்சிலுவைக் கன்னியர் 1955 இல் ஒரு தாதியர் பாடசாலையை ஆரம்பித்தனர். மேலும் 2001ஆம் ஆண்டிலிருந்து தாதியியலில் டிப்ளோமாச் சான்றிதழ் கற்கை நெறியை நடாத்தி வருகின்றனர். 'கலை வழி இறைபணி' என்ற விருதுவாக்குடன் செயற்படும் யாழ். திருமறைக்கலாமன்றம் 1990களிலிருந்தே சங்கீதம், நடனம் போன்ற நுண்கலைத் துறைகளில் டிப்ளோமாச் சான்றிதழ் கற்கைநெறியை வழங்க ஆரம்பித்தது.

இந்த வகையில் யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் நீண்ட காலமாக வழங்கப்பட்டு வரும் மூன்றாம் நிலைக் கல்வி முனைப்புகளை ஒருங்கிணைத்து, முழுமையான உயர்பட்டங்களை வழங்குகின்ற ஓர் உயர்நிலைக்கல்வி நிறுவனத்தை யாழ்ப்பாண மறைமாவட்டம் உருவாக்க வேண்டும் என்பதற்காக 2010ம் ஆண்டிலிருந்து திருமறைக்கலா மன்றத்தின் நிறுவு-னரான மறைந்த நீ. மரியசேவியர் அடிகள் முயற்சிகளை மேற்கொண்டார். அதன் ஆரம்பமாக ஆங்கிலத்தில் டிப்ளோமா வழங்கும் கற்கை நெறியினை ஆரம்பித்து மூன்று அணியினர் தமது கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ய ஆவன செய்தார்.

2015ம் ஆண்டு தற்போதைய ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் யாழ்ப்பாண மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்ற பின், மூன்றாம் நிலைக்கல்வியை வழங்கும் ஓர் உயர்கல்வி நிறுவனத்தை உருவாக்கும்முயற்சிகளில்ஈடுபட்டார். அதன் விளைவாக முழுஅளவிலான ஒரு பல்கலைக் கழகத்திற்கு இணையாக 'பத்திரிசிய உயர் கல்வி நிறுவனம்' உருவாக்கம் பெறுகிறது.

இலங்கை அரசின் கல்வி அமைச்சின் அனுமதியுடன் உயர்பட்டங்களை வழங்கும் பத்திரிசிய உயர் கல்வி நிறுவனத்திற்குரிய நிர்வாக அலகுக்கான கட்டிடத் தொகுதிக்கு 27ஆம் திகதி ஆடி மாதம் 2023ஆம் ஆண்டு வத்திக்கானின் இலங்கைக்கான தூதுவரும், திருத்தந்தையின் அப்போஸ்தலிக்கப் பிரதிநிதியுமான பேரருட் கலாநிதி பிராயன் உடக்வே அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டது. புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆர்வலர்களின் நீண்ட காலக் கனவாக பத்திரிசியார் கல்லூரியின் விரிவாக்கம் அமைந்துள்ளது. புனித பத்திரிசியார் கல்லூரியின் பணி களையும், பங்களிப்புக்களையும் விரிவடையச் செய்து, உயரிய சிகரங்களுக்கு இட்டுச்செல்வதே இக்கனவு.

யாழ்ப்பாண மறைமாவட்டம் மேற்கொண்ட கல்விப்பணிகளில் புனித பத்திரிசியார் கல்லூரியின் பங்களிப்பு மகத்தானது. அப்போஸ்தலிக்கப் பிரதிநிதி ஒரா



சியோ பெற்றக்கினி அவர்கள் 1850இல் 'யாழ்ப்பாணக் கத்தோலிக்க ஆங்கிலப் பாடசாலை' என்னும் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். பின்னர் அது 'யாழ்ப்பாண ஆண்கள் குருமடம்' என்னும் பெயரைப் பெற்று இயங்க ஆரம்பித்து 1881இல் புனித பத்திரிசியார் கல்லூரி என்ற பெயரைப் பெற்றது. பல அமலமரித்தியாகிகளின் அர்ப்பணிப்பான பணியினால் விரிவாக்கம் அடைந்த பத்திரிசியார் கல்லூரி அருட்பணியாளர் திமத்தி லோங் (Rev. Fr. Timothy Long, OMI) என்ற அமலமரித்தியாகியை 1936இல் அதிபராகப் பெற்றது. 1954 வரை புனித பத்திரிசியார் கல்லூரியுடன் பல்வேறுநிலைகளில் அவர் இணைந்திருந்தார். அவரின் காலத்தில் கல்வி, விளையாட்டு மற்றும் மேலதிக செயற்பாடுகள் அனைத்திலும் புனித பத்திரிசியார் கல்லூரி தனது மாண்பு நிலையை எட்டியது. புனித பத்திரிசியார் கல்லூரியை அதன் அடுத்த பெரும்பாகக் கட்டத்திற்கு இட்டுச்செல்ல வேண்டிய ஒரு கனவை திமத்தி லோங் அடிக-ளார் கல்லூரியின் ஆர்வலர்களிடையே விதைத்தாஉ. அந்தக் கனவை 'புனித பத்திரிசியார் பெரும்பாகம்' (Greater St. Patrick's) என்றழைத்தனர். அக்கனவின் ஒரு பகுதியாக உயர் பட்டங்களை உள்ளடக்கும் மூன்றாம் நிலைக் கல்வியையும், தொழில் முன்னிலைக் கல்விப்புலங்களையும் பத்திரிசியார் கல்லூரியின் கல்விப்புலத்தில் இணைப்பதற்கு முயற்சிகள் எடுத்தார். அதன் ஒரு பகுதியாகவே பத்திரிசிய நிறுவனம் உருவாக்கப்பட்டு தொழில்முன்னிலைப் பாடங்களில் சான்றிதழ் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை தொடஉந்து நடைபெற்று வருகின்றன.

புனித பத்திரிசியார் பெரும்பாகத்தின் அடுத்த அங்கமாக பத்திரிசிய உயர் கல்வி நிறுவனம் உதயமாகின்றது. அருட்பணியாளர் திமத்தி லோங் அவர்களின் கனவை நிஜப்படுத்தும் இம்முயற்சி இறையாசிரோடு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த உயர்கல்வி நிறுவனம் பல்கலைக்கழகத்திற்கு இணையான வகையில் பட்டப்படிப்புகளையும், பட்டப்பின் படிப்புகளையும் இலங்கை அரசின் கல்வி அமைச்சின் அனுமதியுடன் வடக்கு மக்களுக்கு வழங்கும். இதன் மூலம் அனைவருக்கும் உயர் கல்வியைச் சாத்தியமாக்கி, கல்வியில் உயர் பட்டங்களைப் பெற விரும்புபவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும்.

## திருத்தந்தை 37 ஆவது உலக இளையோர் தின கொண்டாட்டத்திற்காக ஸ்பெயின் பயணம்

போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் இவ் வாரத்தில் இடம்பெறும் உலக இளையோர் தினக் கொண்டாட்டங்களையொட்டி, அந்நாட்டிற்குத் திருத்தூதுப் பயணத்தை மேற்கொள்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். லிஸ்பனில் சிறப்பிக்கப்படும் 37 ஆவது உலக இளையோர் தினக் கொண்டாட்டங்களையொட்டி அந்நகர் செல்கின்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தான் எந்த ஒரு வெளிநாட்டுத் திருப்பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னரும் முடித்த பின்னரும் உரோம் நகரிலுள்ள மேரி மேஜர் பெருங்கோவில் சென்று செபிப்பதற்கு இணங்க, அப்பெருங்கோவில் சென்று அன்னை மரியா திருவுருவப் படத்தின் முன் செபித்தார்.

போர்த்துக்கல் அரசுத்தலைவராலும், அரசு அதி-காரிகளாலும் திருஅவைத் தலைவர்களாலும் விமான நிலையத்தில் வரவேற்கப்படும் திருத்தந்தை, அதன்பின் அரசுத் தலைவர் மார்சலோ றெபெலோ டி சொவ்சா அவர்களை தனியாகச் சந்தித்து உரையாடுவார். அதன்பின் பெலி அன்ட் கலாசார மையத்தில் அரசியல் அதிகாரிகள், சமூகத் தலைவர்கள் மற்றும் அரசியல் தூதுவர்கள் என ஏறக்குறைய 1000 பேரை சந்திக்க உள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அங்கு தன் முதல் உரையை வழங்கியபின் லிஸ்பனிலுள்ள திருப்பீடத் தூதரகம் சென்று மதிய உணவருந்தி சிறிது நேரம் ஓய்வெடுப்பார். மாலை உள்ளூர் நேரம் 4.30 மணிக்கு, அதாவது இந்திய இலங்கை நேரம் இரவு 9 மணிக்கு திருப்பீடத் தூதரகத்தின் முன்னறையில் போர்த்துக்கல் பாராளுமன்ற தலைவர் ஒகஸ்டோ ஏனஸ்டோ டொஸ் சன்ரோஸ் சில்வா மற்றும் அந்நாட்டுப் பிரதமர் அன்ரோனியோ கொஸ்ரா ஆகியோரை தனித்தனியாகச் சந்தித்து உரையாடுவார். ஆகஸ்ட் 2ஆம் திகதி திருத்தந்தையின் போர்த்துக் கல் நாட்டிற்கான முதல் நாள் பயணத்தின்போதே ஆயர்கள், அருட்பணியாளர்கள், திருத்தொண்டர்கள், துறவறத்தார், குருத்துவப் பயிற்சி மாணவர்கள் ஆகியோரைச் சந்தித்து திருவழிபாட்டில்கலந்துகொள்வதும்மறையுரைவழங்குவதும்இடம்பெறும்.

உலக இளையோர் தினக் கொண்டாட்டங்களையொட்டி போர்த்துக்கல்லின் லிஸ்பன் செல்லும் திருத்தந்தை, ஆகஸ்ட் 5ஆம் திகதி ஒரு நாள் பயணமாக பாத்திமா நகர் மரியன்னை திருத்தலத்தையும் சென்று சந்திப்பார். 1985ஆம் ஆண்டு ஐ.நா. நிறுவனத்தால் உலக இளையோர் ஆண்டு சிறப்பிக்கப்பட்டதையொட்டி அதே ஆண்டு டிசம்பர் மாதம், ஒவ்வோர் ஆண்டும் உலக இளையோர் தினம் சிறப்பிக்கப்பட திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்களால் முன்வைக்கப்பட்ட பரிந்துரையின்படி, 1986ல் முதல் உலக இளையோர் தினம் திருஅவையில் சிறப்பிக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் அந்தந்த மறைமாவட்டத்திலும், அதேவேளை உரோமிலும், இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை வெளிநாட்டில் ஒரு முன்னறிவிக்கப்பட்ட இடத்திலும் துவக்க காலங்களில் சிறப்பிக்கப்பட்டுவந்த இந்த உலக இளையோர் தினக் கொண்டாட்டங்கள், 2002ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை வெளிநாடுகளில் என மாறி, தற்போது கோவிட் பெருந்தொற்றின் காரணமாக 2019ஆம் ஆண்டு பானமா நிகழ்வுக்குப்பின், நான்கு ஆண்டுகள் கடந்து போர்த்துக்கல்லில் இடம்பெற உள்ளது.

# நான் நானாக வேண்டும் ...

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் (அமதி)

**“பிறக்கும் பொழுது பிச்சைக்காரனாக வந்தாய், இறக்கும் பொழுது கடனாளியாகப் போகாதே”**
**-அப்துல் றகுமான்**

அகப் பயணம் இன்று தேவைதானா? தியானம் இன்றி, ‘நான் நானாக வேண்டும்’ என்பதை என்னால் கண்டுணர முடிகின்றதா? உள்நோக்கிப் பார்த்து வெளிநோக்கிப் பாய்வதற்கு, கீழ்நோக்கிப் பார்த்து மேல் நோக்கி நகர்வதற்கு அகப் பயணம் அவசியமாகத் தேவைப்படுகின்றது.

*“உட்தியானம் கடவுளை மாற்றுவதில்லை, மாறாக, அது நேர்மையாகச் செபிப்பவரை மாற்றுகின்றது”*
**-கிக்கோர்ட்**

இறைவனை விருப்போடு சுவைக்கும் நேரமே தியானமாகும் . வரலாற்றுக்கு வந்திருக்கும் நான் என் வரவைப் பதிவு செய்ய வேண்டாமா? அர்த்தமுள்ள முறையில் எனது வாழ்வு வாழப்படவேண்டும். எனக்குள் என்னைத் தேடல் இயக்கப்பாட்டுச் சக்தியை என்னுள் உருவாக்குகின்றது.

**இயக்கப்பாட்டுச் சக்தி 4 படிகளில் இடம் பெறுகின்றது. அவையாவன:**

**1. மீள் பார்த்தல்** - எனது வாழ்வினை மீண்டும் மீண்டும் நேர்நோக்கில் பார்த்தல்
**2.மீள் சிந்தித்தல்** - எனது மனத்தை நேர் சிந்தனைகளால் நிரப்புதல்
**3. கண்டுணரல்** - என்னை நானாக ஏற்று அனுபவித்தல்
**4. நேர்நிலை மாற்றம்** - அடிப்படையான முறையில் மாற்றத்தை அனுபவித்தல்.

மாற்றமாக நான் மாறுகின்றேன். ‘ஆம்’ என்று சொல்லவேண்டிய சந்தர்ப்பங்களுக்கு ‘ஆம்’ என்று சொல்ல ஆயத்தமாகின்றேன்.

‘இல்லை’ என்று சொல்ல வேண்டிய சந்தர்ப்பங்களுக்கு ‘.இல்லை’ என்று சொல்ல ஆயத்தமாகின்றேன்.

வாழ்வியல் பாதையை விட்டுப் பரபரப்படைதல், பராக்குப் பார்த்தல், மயக்க நிலையில் தடுமாறுதல் போன்ற போக்குகளிலிருந்து விடுதலை பெற முயல்கின்றேன்.

சுயசௌகரியங்களுக்காக எனது நிலைவாழ்வைப் பறி கொடுக்காது, போலி இன்பங்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்காது, நேர்த்தியான வாழ்விற்கு வித்திடுகின்றேன்.

**வாழ்வியல் ஆய்வின் கூறுகள் ஏழு. அவை பின்வருமாறு:**

**1. சுய ஆய்வு**

நான் யார்? எனது திறன்கள் எவை? எனது மட்டுப்படுத்தப்பட்ட தன்மைகள் எவை?

நான் நானாக வாழ்வதற்குத் தடையாயிருப்பவற்றைத் தவிர்த்துவிட்டு, துணையாயிருப்பவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நிறைகாண் மனோநிலையில் மாற்றத்தை நோக்கி நான் தொடர்ந்து பயணிக்கும்பொழுது தூய்மையாக்கல் இடம்பெறுகின்றது. இறைவன் முன்னிலையிலும் மனிதர் முன்னிலையிலும் எனக்குள் இருக்கும் உண்மைத்தன்மையை பலங்களோடும், பலவீனங்களோடும் அப்பட்டமாக ஏற்றுவாழுதல் எனது இருப்பியல் நிலைக்கு ஆதாரமாகின்றது.

**2. திருஅவை ஆய்வு**

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தை ஆரம்பித்தபொழுது திருத்தந்தை 23ம் யோவாண் ‘திருஅவையின் கதவுகளும் யன்னல்களும் திறந்துவிடப்படட்டும். அப்பொழுது உள்ளே உள்ள காற்று வெளியே வர, வெளியே உள்ள காற்று உள்ளே வர சமநிலை அரும்பட்டும்’ என்று மொழிந்தார்.



திருத்தந்தை 2ம் யோவாண் பவுல் 1999ம் ஆண்டு, 2000 ஆம் ஆண்டை வரவேற்று, “பழையது போகாவிட்டால் புதியது புகமுடியாது” என்று மொழிந்தார். ஆட்டின் மணம் அறிந்து தேடிச் செல்லும் ஆயன்போல் நானும் பிறர் தேவையை அறிந்து உதவி நல்கிட முன்வரவேண்டும்.

**3. சமூக ஆய்வு**

சாதி, செல்வம், மதம், மொழி எனப் பாகுபாடு காட்டி, பேதங்களை வளர்ப்பது சமூக வளர்ச்சிக்கு இடறலாகவே அமையும். மனிதத்தை மதித்து நேசிக்க நான் மகிழ்வோடு முனைவேனாக.

**4. பிரபஞ்ச ஆய்வு**

இறைவனுக்கும் இஸ்ராயேலருக்கும் இடையே இடம்பெற்ற உடன்படிக்கை இறைவனுக்கும் பிரபஞ்சத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையாகக் கருதப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில், கிறிஸ்துவினால் மனிதரோடு மேற்கொண்ட புதிய உடன்படிக்கை இரத்தத்தினாலாகிய நிலையான உடன்படிக்கையாக அமைகின்றது. இயற்கையோடு, இறைவனோடு இணைந்து மனிதன் தொடர் பயணத்தை மேற்கொள்ள வேண்டியவனாகின்றான்.

**5. இதய மாற்றம்**

தீமையிலிருந்து நன்மைக்கும் நன்மையிலிருந்து மேலான நன்மைத்தனத்திற்கும் நகருகின்ற தொடர்பயணமே இதய மாற்றமாகும். எதிர்மறைப்போக்கிலிருந்து பக்குவப்பட்ட மன நிலைக்கு, கடுமையான வாழ்க்கை முறை யிலிருந்து கருணையான இதய மாற்றத்திற்கு, ‘எல்லோரும் பொல்லாதவர்’ என்று திட்டிச் சாபம் போடுவதிலிருந்து ‘எல்லோரும் நல்லவர்’ என ஆசீர்வதிக்கும் நல்ல மனோபாங்கு மாற்றத்திற்கு அசைவுறுவதே இதய மாற்றமாகும்.

**6. விடையின் பகுதியாதல்**

பிரச்சினையின் பகுதியாக இருப்பதை விட்டு, விடையின் பகுதியாக நான் மாறுவதே இன்று தேவையாகும். பிரச்சினையில் குளிர்காய்ந்தது போதும்.

**7. அருள்நிலை**

இலக்குத் தவறி நிற்பதே பாவமாகும். எனது வாழ்வின் வரைவிலக்கணத்தை, நிலைவாழ்விற்கான இறுதி இலக்கை இழந்துவிடாது, இறைவனை ஆதாயமாக்கிக் கொள்வதை இலக்காகக் கொண்டு இயங்குவதே அருள்நிலையாகும். எனவே, என்னை நானாக மாற்றி, என் இதயத்துள் இறைவன், இயற்கை, அயலவர் இயல்பாகச் சங்கமிக்க நான் இயங்குநிலையில் வாழும்பொழுது, எனது உள்ளம் புதுப் பொலிவுற்றுப் பிரகாசிக்கும்.

## பொதுநிலையினர் பற்றிய அறிவுப் போட்டி

**41. பொதுநிலையினரின் அடிப்படைத் தலைமைத்துவம் முதலில் அமைவது எங்கு?** குடும்பத்தில்

**42. பொதுநிலையினர் பற்றிய இன்றைய இறையியல் கருத்துக்கள் ஐந்து தருக?**
1. கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களின் அடிப்படைச் சமத்துவம்
2. திருஅவையின் பணிகளில் அனைவருக்கும் உரிய பொதுப் பொறுப்பு
3. திருமுழுக்குத் தரும் குருத்துவ நிலைப்பாட்டின் முதன்மை
4. பொதுநிலைக் குருத்துவத்ததின் முன்னுரிமை
5. பொதுநிலைக் குருத்துவத்திற்கு உதவுவதே திருநிலைக் குருத்துவத்தின் நோக்கம்.

**43. பொதுநிலையினர் ஆற்றக்கூடிய பணிகள் திருஅவைச் சட்டத்தில் ஏராள-மாய் வழங்கப்பட்டுள்ளன அவற்றுள் முக்கியமானவை எவை?**
பீடத்துணையாளர் பணி, வாசகர் பணி திருவழிபாட்டு மன்றாட்டுக்களுக்குத் தலைமையேற்றல் செபவழிபாடுகளை நடாத்தல் , தொடர்பு ஊடகங்களின் வாயிலாக நற்செய்தியை அறிவித்தல்.

**44. பொதுநிலையினருக்கு உரித்தான கடமைகளும் உரிமைகளும் எவை?**
இறையியல் பயிற்சி உழைப்புக்கேற்ப ஊதியம் பெறல், குடும்ப வாழ்வில் மறைப்பணி திருஅவை அலுவல்களையும், பணிகளையும் ஏற்றல்.

**45.பொதுநிலையினரின் வாழ்வும் பணியும் அமைந்துள்ள இரு தளங்கள் எவை?** 1. திருஅவை 2. சமுதாயம்

**46. பொதுநிலையினரின் உருவாக்கம் என்றால் என்ன?**
திருஅவையிலும் சமுதாயத்திலும் கிறிஸ்துவின் பணியைச் செய்ய ஒருவரைத் தெரிவு செய்து பயிற்றுவித்து அப்பணியைச் சரியாகச் செய்யத் தகுதியுடையவராக அவரைத் தயாரிப்பதாகும்.

**47. பங்கின் உண்மையான உறுப்பினர் எவ்வாறு இருக்க வேண்டும்?**
பங்குத்தந்தையோடும் பங்கிலுள்ள பிற கிறிஸ்தவர்களோடும், பிற சமயத்தவருடனும் நல் உறவு கொண்டிருத்தல் வேண்டும்.
தனது பங்கு என்ற ஓர் உண்மையான உணர்வு இருக்க வேண்டும்.

**48. பங்க பழங்கால அமைப்பு என்றாலும் காலத்தின் தேவைக்கேற்ப அதைப் புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற கூற்றை ஆணித்தரமாக எடுத்துரைத்தவர் யார்?**
திருத்தந்தை ம் சின்னப்பர்

**49. கட்டளையில் பெரிய கட்டளையும் பிறர் அன்புக் கட்டளை என்று கூறப்படும் கட்டளை எது?.**
உன்மீது நீ அன்பு கூர்வதைப் போல உனக்கு அடுத்தவர் மீதும் அன்பு கூர்வாயாக

**50. சகோதர அன்பு பங்கு மக்களிடத்தே சரிந்து விழாத கோபுரமாய் தலைநிமிர்ந்து நிற்பதற்கு உறுதியான அடையாளமாக அமைவது எது?**
ஒப்பாவு

## இந்த நிலை மாறும்



நம் எல்லோருடைய வாழ்விலும் இருண்ட நாட்கள் உண்டு. ஒவ்வோர் இருண்ட நாளும் கழியத்தான் போகிறது. இருளைப்புதுப்பித்துக்கொண்டேஇருக்காதீர்கள். இறந்துபோன கடந்தகாலம் இறந்ததைப் புதைக்கட்டும். உலகில் எதுவும் எப்போதும் நீடிப்பதில்லை. தொல்லைகள் கூட நாமாகப் புதுப்பிக்கா விட்டால் சிறிது காலத்திற்குப் பின் மறைந்து விடுகின்றன.

எத்துன்பமானாலும் அவை விலகக்கூடியவையே என்னும் நம்பிக்கை உயர்வில் துணிந்து நாம் தாராளமாக எதையும் எதிர்கொள்ளலாம். தவிர்க்க முடியாத ஒன்று எதிர்ப்படும்போது அதை அப்படியே ஏற்கத் தயாராயிருங்கள். ஏனெனில் அது குறித்து நீங்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை. ஆகவே அதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிராதீர்கள். மூழ்கும் கப்பலின் மேல் தளத்தைக் கழுவிச் சுத்தப்படுத்திக் கொண்டிருப்பது வீண் வேலை. அது மூழ்கத்தான் போகிறது என்பது திண்ணமானால், மூழ்கும் கப்பலை விட்டிறங்கி அடுத்த பயணக் கப்பலைத் தேடுவதுதான் சரியானது. எந்தச் சூழ்நிலையும் மாறும் என்றால் உங்கள் துன்பச் சூழலும் மாறும்தானே! இந்த நிலை மாறும்.

## விமர்சனங்களுக்கு அஞ்சாதீர்!

ஒரு வீட்டில் இருந்த தாத்தா தன் பேரன்களுக்கு அறிவுரை சொல்லிக்கொண்டே இருப்பார். அடிக்கடி படிக்கச் சொல்லி நச்சரிப்பார். இதனால் தாத்தாவைப் பேரன்களுக்குப் பிடிக்காது. அந்தச் சிறுவர்கள் ஒரு கிளி வளர்த்தனர். தங்கள் தாத்தாவைக் கேலி செய்ய அந்த கிளிக்குக் கற்றுக் கொடுத்தனர். கிளியும் சிறுவர்கள் சொன்னபடி, “தாத்தாவே செத்துப் போ, தாத்தாவே செத்துப் போ” எனத் திரும்பத் திரும்பச் சொல்லியது. இதைக்கேட்ட தாத்தாவுக்கு ஏக வருத்தம்.

ஒருநாள் தாத்தா குருவானவர் ஒருவர் தங்குமில்லத்திற்குப் போனார். அங்கேயும் ஒரு கிளி இருந்தது. அது அங்கு நடக்கும் பிரார்த்தனையைக் கேட்டு, “ஆமென்..ஆமென்...’ என்று சொல்லிக் கொண்டிருந்தது. இந்தக் கிளியுடன் நம் வீட்டுக் கிளியும் இருந்தால் அதற்கு நல்ல புத்தி வருமென நினைத்த தாத்தா, மறுநாள் குருவானவரின் கிளியின் பக்கத்தில் தன் கிளியை விட்டார்.

ஆனால், ஜென்ம புத்தி மாறுமா?

“தாத்தாவே செத்துப் போ’ எனச் சிறுவர்கள் வீட்டுக் கிளி சொல்லச் சொல்ல, “ஆமென்...ஆமென்...’ என்றது குருவானவரின் கிளி. பிறர் விமர்சிக்கிறார்கள் என்பதற்காக நாம் அவர்களுக்கு நல்லபாதையைக் கற்றுக் கொடுக்கத் தவற வேண்டியதில்லை. “முன்நிலையிலும் அவன் பின் நிலைமை அதிகக் கேடுள்ளதாக இருக்கும்” என்று மனிதவாழ்வு பற்றி வேதாகமம் சொல்கிறது. எனவே, பின்னால் வரும் கேடுகளைத் தவிர்க்க மற்றவர்களுக்கு நாம் நன்மையைப் போதித்துக் கொண்டே இருக்க வேண்டும். அவர்கள் இப்போது நம்மை விமர்சிக்கிறார்களே என்பதற்காக, அவர்களைக் கைவிட்டுவிட்டால் அவர்களின் பிற்கால நிலை இன்னும் மோசமாகி விடும்.



# செபமாலையின் வீரர்கள்

## ஒரு ஆன்மீக ஆயுதத்தின் வரலாறும் அதன் வீரர்களும்

03

**Champions of the Rosary - The History and Heroes of a Spritual Weapon**
**by Donald H. Calloway MIC (Marian Fathers of the Immaculate Conception)**
(–தமிழில் – அருட்பணி.எஸ்.வி.பி. மங்களராஜா) டொனால்ட் எச். கலோவே
MIC (Marian Fathers of the Immaculate Conception)
அமல உற்பவ மரியாளின் குருக்கள் துறவறசபை

**மரியாளின் திருப்புகழ் மாலைத்தொகுப்பு** (Marian Psalter)

இம்மடத்துறவு சபைகள் உருவாக்கிய அருள் மிகப் பெற்றவரே செபங்களிடையே பதிலுரைப்பாடல்களும் ஆங்காங்கே இடம்பெற்றன. இரண்டு மரியாளின் திருப்புகழ் மாலைத் தொகுப்புக்களிலும் அருள் மிகப் பெற்றவரே செபத்தைச் செபிக்கும் போது கிறிஸ்துவின் வாழ்க்கையில் உள்ள மறைபொருட்களைத் தியானிப்பதற்கான அம்சங்கள் இருக்கவில்லை. இக்காலத்தில் மரியாளின் திருப்புகழ் மாலைச்செபம் மடத்துறவிகளது தனிப்பட்ட செபத்திற்காகவேயன்றி இறைமக்களின் செபத்திற்கென்று பொதுவாகப் பயன்படுத்தப்படவில்லை. அத்துடன் இவ்விரு சபைகளும் கடும் மடத்துறவு சபைகளாயிருந்தமையால் அவர்களது மரியாளின் திருப்புகழ் மாலைத் தொகுப்புக்கள் திருத்தூது அல்லது மறையறிப்புப் பரிமாணத்தைக் கொண்டிருக்கவில்லை. சிஸ்டர்சியன், கார்த்தூசியன் சபையினர் மரியாளின் திருப்புகழ் மாலைத் தொகுப்பை செபிப்பது பரலோக மந்திர செபமணிச் செபத்திற்கு ஒரு இணையாக அமைக்கப் பட்டதேயன்றி அதற்கு வேறு பரிமாணம் இருக்கவில்லை. இவ்விரு துறவற சபைகளும் இச்செப முறையை ஒரு மறையுரையாற்றும் வழிமுறையாகவோ, பேதகங்களை வெற்றி கொள்ளும் ஆயுதமாகவோ பயன்படுத்தவில்லை. அனேகமானவர்கள் இதை ஒரு ஆன்மீக ஆயுதமாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கூறலாம்.

❖ மரியாள் மீது இத்துறவற சபையினர் கொண்டிருந்த அன்பும் இவர்கள் மரியாளைப் புகழ்வதில் பின்பற்றிய முறையும் இறைகைவினைஞருக்கு மிகவும் பிடித்திருந்தது. இவர்கள் பயன்படுத்திய மரியாளின் திருப்புகழ் மாலையைக்கொண்டு இவர் முற்றிலும் புதியதொரு விதமான மரியாளின் திருப்புகழ் மாலைக்கான மூலக்கூற்றை ஏற்படுத்தினார். இது மறையுரையாற்றுவதற்கும், தியானிப்பதற்குமான பரிமாணத்தைக் கொண்டிருந்தது. இப்புதிய மரியாளின் திருப்புகழ்மாலை கிறிஸ்துவின் வாழ்வின் மீட்புப்பணியின் மறைபொருட்களைத்தன்னகத்தே கொண்டதாயும், தீமைக்குப் பொய்மைக்கும், பாவத்திற்கு மெதிராகப் பயன்படுத்தக்கூடிய ஆன்மீக வாளாகவும் அமைந்திருந்தது. இதற்குமுன் மடத்துறவிகளின் பின்னணியில் உருவானது போலல்லாது, இப்புதிய மரியாளின் திருப்புகழ்மாலையின் நோக்கம் நற்செய்திக்கெதிரான பேதகங்களையும், பசாசையும் வெற்றிகொள்வதற்கான ஆயுதமாகச்செயற்படுவதாகும். இப்படியானதொரு ஆயுதம் 13ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கட்டாய தேவையாகவுமிருந்தது. ஏற்கனவே திரு அவையில் பரிசுத்த ஆவியானவர் ஆன்மீக தாகம் கொண்ட இரவலர் துறவற சபைகள் சிலவற்றின் நிறுவுநர்களைத்தயாரித்து வந்தார். இத்துறவறசபையினர் இயல்பிலேயே திருத்தூதப்பணியில் ஈடுபடுபவர்களாகவும், இருளின் வல்லமைக்கெதிராகப் போராடுபவர்களாகவும் இருப்பர். இறைகைவினைஞர் இவர்களை ஒரு ஆயுதமின்றி அனுப்பமாட்டார்.

❖ அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க செபம் பரலோக மந்திர செபமணிகள் அத்துடன் மரியாளின் திருப்புகழ் மாலை ஆகிய எல்லா மூலக்கூறுகளும் 12ம் நூற்றாண்டில் ஒன்று சேர்க்கப்பட்டபின் இந்த வாள் முழுமைபெற்று இதன் நிறுவுநர் என்று எப்போதும் அறியப்படும் ஒருவரிடம் பொறுப்பாக வழங்கப்பட்டது. இச் செபமாலை மரியாளின் வாள் என விளங்கியதால் இறைவன் இதன் நிறுவுநரைத்தெரித்தெடுக்கும் பெருமையை மரியாளிடமே வழங்கினார். இவ்வாறு தேர்தேடுக்கப்பட்டவர் இவ்வான்மீகப் போரில் இவ்வாளைச் சுழற்றி வீசிப்பயன்படுத்திய முதல் மனிதரானார். விண்ணக அரசி இதற்குப்பொருத்தமானதொருவரையே தம் மனதில் கொண்டிருந்தார்.

**13ம் நூற்றாண்டு - புனித சாமிநாதரும் (St. Dominic) செபமாலையின் ஆரம்பமும்**

13ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரான்சின் தென்பகுதியில் அல்பி எனும் நகரில் தோன்றிய ஒரு பேதகக்குழுவினரது வன்முறைத்தாக்குதலுக்குத்திருஅவை உள்ளானது. 'அல்பி' நகரில் இப்பேதகக் குழு தோற்றம் பெற்றதால் இவர்கள் 'அல்பிஜென்சியன்' களென அழைக்கப்பட்டனர். பல நாசக்காரச் செயல்களில் ஈடுபட்டு வந்த இக்குழுவினர் தம்மைக்கடும் கோட்பாட்டுத் தூய்மைவாதிகளாக அடையாளப்படுத்திப் பலரைத்தமது குழுவில் இணைத்து வேகமாகப் பரவத்துவங்கியிருந்தனர். ஆன்மீகம் சம்பந்தமான விடயங்கள் மட்டுமே ஏற்புடையவை, லௌகீகம் சம்பந்தமானவையெல்லாம் தீயவை என்பது தான் இவர்களது முக்கிய படிப்பினை. அவர்களது கோட்பாட்டின் படி ஒவ்வொருவருடைய ஆன்மாவும் 'மீட்பை' அடையவேண்டுமாயின் தமது உடல் எனும் இந்த லௌகீகச்சிறையிலிருந்து விடுதலை பெறவேண்டும். இவர்களது நம்பிக்கைத்தொகுப்பானது கிறிஸ்தவ ஒழுக்கவியலுக்கும், இறை-மனித மீட்பின் மறைபொருட்களுக்கும் குறிப்பாகக் கிறிஸ்துவின் மனுவுருவாதல், பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றுக்கும் முற்றிலும் முரணானவை. எங்களை மீட்பதற்காகக் கடவுள் மனுவுருவெடுத்தார். என்ற படிப்பினையை இவர்களால் நினைத்துப்பார்க்கக்கூட முடியாதிருந்தது. இவர்கள் கிறிஸ்தவ சமயத்தில் உள்ள மனிதாவதாரத்தை மிகவும் வன்மையாக எதிர்த்தனர். இவர்களுடன் ஒரு உரையாடலை மேற்கொள்ள அனுப்பப்பட்ட பாப்பரசரின் பிரதிநிதியைக் கொலை செய்யும் அளவிற்கு ஒரு கட்டத்தில் இவர்களது வன்முறைப் போக்கு அமைந்திருந்தது.

இக்காலகட்டத்தில் தான் இறைகைவினைஞர் மரியாளின் திருப்புகழ் மாலைத் தொகுப்பினை செபமாலையென்னும் ஆன்மீக வாளாக மாற்ற எண்ணினார். அல்பிஜென்சியன் பேதகர்கள் எந்தெந்த மறையுண்மைகள் மீது தாக்குதல் நடத்தினார்களோ அதே மறையுண்மைகளை இச்செபமாலை என்னும் வாளினுள் இறைகைவினைஞர் புகுத்தினார். இந்த வாள் உறையிலிருந்து உருவியெடுக்கப்பட்டு கிறிஸ்தவத்தின் எதிரிகள்மீது பிரயோகிக்கத் தயார் நிலையில் இருந்தது.

**புனித சாமிநாதர் (St. Dominic)**

அல்பிஜென்சியன் பேதகம் பரவிய இக்காலத்தில் ஸ்பானிய தேசத்தவரான சாமிநாதர் குஸ்மான் என்பவர் அல்பிஜென்சியன் பேதகக் கோட்பாடுகளுக்குக்கெதிரான ஒரு உயிர்த்துடிப்புள்ள பிரசங்கியாரா கத்தம்மை நிலைநிறுத்திக் கொண்டார். இவர் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறைப்படி வாழும் துறவறக்குழுமத்தின் குருக்களுள் ஒருவராக வாழ்ந்து வந்த அதேவேளையில் அல்பிஜென்சியன் பேதகக் கொள்கை பரவி வந்தமை பற்றியும் அதனால் கத்தோலிக்கர் எதிர் கொண்ட அச்சுறுத்தல் பற்றியும் அதிக கரிசனை கொண்டவராகவுமிருந்தார். இவர் கால்நடையாகவே நகரம் நகரமாகச் சென்று கிறிஸ்தவ மறையின் உண்மைகளைப் போதிக்கும் நடவடிக்கையில் ஈடுபடலானார். இறை பராமரிப்பு இவரை இப்பணிக்கெனத்தேர்ந்தெடுத்தது என்று தான் சொல்லவேண்டும்.

1170 ம் ஆண்டு சாமிநாதர் பிறந்தபோது இவரது தாயார் அருளாளர் ஜுவானா டி ஆஷா (Juvana De Asha) தமது மகனைப்பற்றித் தூரநோக்குடன் ஒரு கனவு கண்டார். இந்தக்கனவில் எரியும் தீப்பந்தத்தைத்தனது வாயில் கவ்விய நாய் ஒன்று தமது உதரத்திலிருந்து பாய்ந்து செல்வதாகக் கண்டார். இந்நாய் உலகம் முழுவதும் சென்று இத்தீப்பந்தத்தினால் எல்லா இடங்களிலும் தீமூட்டுவதாக இக்காட்சி அமைந்திருந்தது. தனது மகன் ஒரு காலத்தில் பிரசங்கிமார் (சாமிநாதர் சபை) என்றழைக்கப்படும் ஒரு துறவற சபையை நிறுவுவார். என்பதனை அப்போது அவர் அறிந்திருக்க நியாயமில்லை கிறிஸ்தவத்தின் புனித மறைபொருட்களைத் தமது ஆன்மீகத்தாகமுள்ள மறையுரைகளால் போதித்து உலகம் முழுவதையும் கிறிஸ்து மீது கொண்ட அன்புத்தீயினால் பற்றியெரியச்செய்வது இந்தச் சாமிநாதர் துறவறசபையினரின் நோக்காகவிருந்தது. காலப்போக்கில் இச்சபையினர் "டோமினி கானெஸ்" (Domini Canes) அதாவது 'கடவுளின் நாய்கள்' என்று அடையாளப்படுத்தப்படலாயினர்.

(தொடரும்...)

# தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

26

– அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்



(சென்றவாரத் தொடர்ச்சி..)

**9.8 தமிழ் இளைஞர் அரச பயங்கரவாதத்திற்கு எதிராக ஆரம்பித்த ஆயுதப் போராட்டத்தை, தமிழரே இன்னும் சரியாகப் புரிந்து கொள்வதாக இல்லை.**

இதன் காரணமாக, எதிர்காலத்தை நோக்கிய தமிழ் இளைஞர்கள் தங்களுக்குக் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் எதிர்காலமில்லை என்று விரக்தியின் சுவருக்குத் தள்ளப்பட்டனர்.

ஆகையினால் ஆயுதப் போராட்டம், தானாக வெடிக்கவில்லை. தன்னிச்சையாக தமிழரினால் ஆரம்பிக்கப்பட்டதுமல்ல. அரசாங்கத்தின் போக்கும், தமிழர் தரப்பில் பொருத்தமான வழிகாட்டலுமின்றி, மதத்தலைவர்கள் சாதித்த மௌன செயற்பாட்டுப் போக்குமே தமிழ் இளைஞரை ஆயுதப் போராட்டத்திற்குத் தள்ளியது.

இனியாவது தமிழ் மக்களின் மதத் தலைவர்கள், விசேடமாக கிறிஸ்தவ தலைவர்கள், மனித உரிமை பிரச்சினைகளை மக்கள் பிரச்சினையாக கணித்து, அது அரசியல் என்று தள்ளி விடாது, மௌனம் சாதிக்காது, உண்மை நீதிக்காக சமாதானத்திற்காக குரல் கொடுக்கத் துணியவேண்டும். வன்முறையற்ற எதிர்ப்புப் போராட்ட மாற்று வழிகளை, பாதிக்கப்பட்டோருடைய போராட்டத்திற்கு சுட்டிக் காட்டவேண்டும். திருஅவையின் மௌனமும் செயலற்ற தன்மையும், எனது கிறிஸ்தவ சீடத்துவத்திற்கு முரணாகத் தோன்றிற்று. என்னைத் தன்னிச்சையான செயல்களுக்கு தள்ளியது. இங்கே நான் நேராக அனுபவித்தவைகளைக் கூறமுடியும்.

(அதிலே ஒரு விசேட அனுபவம் :- 1986ஆம் ஆண்டில் கண்டி குருமட இறையியல் பொறுப்பாளராகப் 10 வருடம் பணியாற்றி விட்டு, யாழ் புனித சவேரியார் குருமட அதிபராகப் பணியேற்றேன். இலங்கை அரச படைகளுக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையில் போர் நடந்து கொண்டிருந்தது. ஆனால் 1987இல் இந்திய அமைதிப் படைகள் (Indian Peace Keeping Force - IPKF) தமிழ்ப் பகுதிகளைப் பொறுப்பேற்றனர்.

இதனால் குருமடமும் பல இன்னல்களை அனுபவித்தது. விடுதலைப் புலிகளைத் தேடிய இந்தியப் படையினர், பொய்யான சந்தேகத்தின் காரணமாக, 6 குருமாணவரை 5 நாட்களாக வன்முறை விசாரணைக்கு உட்படுத்திய பின் எனது மன்றாட்டிற்கு இணங்கி விடுவித்தனர்.

இந்தவேளையில் 120 இறையியலாளர்கள் தென் ஆபிரிக்க மக்களின் போராட்டத்திற்கு ஒத்துழைப்புக் கொடுத்து, ஓர் சிறு புத்தகத்தில் தங்கள் கருத்தை வெளியிட்டிருந்தனர். அதன் பெயர் (Kairos Document). அவர்கள் கூறியது என்னவென்றால் நாட்டிலே 3 விதமான இறையியல்கள் திரு அவைகளில் செயற்படுகின்றன.

1. அந்த நாட்டு அரசியலுடன் ஒத்துபோகும் இறையியல்
2. உரோமைத் திருச்சபையின் பாரம்பரிய இறையியல்
3. ஆனால் தென் ஆபிரிக்க மக்களுக்கு வேண்டியது முற்போக்கான, ஒரு தீர்க்கதரிசன இறையியல்

அதை அடித்தளமாக வைத்து, நானும் இலங்கைத் திருஅவையை வழிநடத்தும் இறையியலை விமர்சித்து, இறைவாக்கு (தீர்க்கதரிசன) இறையியலை ஊக்குவித்து, ஒரு புத்தகத்தை ஆங்கிலத்தில் Church Politics and War in Sri Lanka என்றும், தமிழில் - இனப் பிரச்சினையும் இலங்கை திருச்சபையும் - என்ற தலைப்பிலும் வெளியிட்டேன்.

அத்துடன் எமது மதத் தலைவர்கள் நடந்து கொண்டிருப்பது தமிழ்ப் பயங்கரவாதமும் அதற்கெதிரான போரும் அரசியலும் என்று, மௌனத்தில் ஒதுங்கி செயற்படாத நேரத்தில், நான் மறைமாவட்டக் குரு முதல்வராக, ஆலயங்கள் பாடசாலைகள் மேல் குண்டுகள் வீசப்பட்ட போது, பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக குரல் எழுப்பினேன். தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் வரவேற்றனர் ஆனால் சிங்கள மக்களும் அரசாங்கமும், நான் புலிகளோடு இணைந்து பயங்கரவாதத்திற்கு உதவுகிறேன் என்றனர்.

1996இல் எனக்கெதிராக ஆங்கில, சிங்கள, அரச ஊடகங்கள் பொய்யான குற்றச்சாட்டுகளுடன் என்னைத் தாக்கினர். மக்களின் சார்பாகக் குருமுதல்வராக பொறுப்புடன் வெளியிட்ட கருத்துகளை, தமிழ்த் திருஅவை ஆயர்கள் குருக்கள் தன்னும் விளங்கி, பகிரங்கமாக ஆதரிக்க முன் வரவில்லை.

இந்நிலையில் நான் நாட்டை விட்டு 1996ஆம் ஆண்டின் இறுதியில் வெளியேறினேன். 2017 வரை நான் ஐரோப்பாவில் வாழ்ந்தேன். இக்காலத்தில் குருவாகப் பணி செய்து கொண்டு, எனது தமிழ் மக்களுக்காக முழுமையாகச் செயற்பட்டேன்.

(தொடரும்...)

## காவலன் கலசம்




**1862ம் ஆண்டு யாழ் திருத்தூது மாவட்டப் புள்ளி விபரங்கள்**

*(1863ம் ஆண்டு சென்னையில் வெளியிடப்பட்ட கத்தோலிக்க சமய புள்ளி விபரக்கோவையிலிருந்து எடுக்கப்பட்டது.)*

இங்கு 48 பாடசாலைகள் உள்ளன- 4 ஆங்கிலப் பாடசாலைகளும் 44 தமிழ், சிங்கள பாடசாலைகளுமுள்ளன. இப்பாடசாலைகளில் 1588 மாணவர்கள் (ஆண்களும், பெண்களும்) பயில்கின்றனர். 53 ஆசிரியர்களும் 3 ஆசிரியைகளும் பணியாற்றுகின்றனர்.

1859ம்ஆண்டு 275 வளர்ந்தோர் கத்தோலிக்க திருமறையைத்தழுவியுள்ளனர். இவர்களை விட 25 பேர் புரட்டஸ்தாந்து சபைகளிலிருந்து கத்தோலிக்க திருமறையைத்தழுவியுள்ளனர்.

1859ம் ஆண்டு 250பேர்வரை கோவா பிரிவினையிலிருந்து வெளியேறி உண்மையான கத்தோலிக்கத்திருஅவையில் இணைந்துகொண்டனர். 1860ல் இன்னமும் 210 பேர் கத்தோலிக்கத்திரு அவையில் இணைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு நற்பண்புகளை ஊக்குவிக்கும் மூன்று பக்திச்சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று புனித திருமுழுக்கு யோவானின் பாதுகாவலில் இயங்குகின்றது. இதன் உறுப்பினர்களது முக்கிய நோக்கங்களில் ஒன்று தம்மிடையே குடிப்பழக்கத்தை அறவே ஒழிப்பது. முழுமையாக மது ஒழிப்பு இவர்களது சட்ட திட்டங்களில் ஒன்றாக இல்லாவிடினும் உறுப்பினர்களுள் பெரும் பாலானவர்கள் மது அருந்துபவர்களல்ல.

அடுத்து அமல உற்பவ அன்னையின் சபை விவாகமாகாத விவாகமான பெண்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. இதன் உறுப்பினர்கள் நல்லொழுக்கத்தின் சிறந்த முன்மாதிரிகைகளாக கத்தோலிக்க குழுமம் முழுவதற்குமே சிறந்த அணிகலன்களாக விளங்குகின்றார்கள்.

1858ம் ஆண்டு ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் மகா ஞானெடுக்கம் போதிக்கப்பட்டதைத்தொடர்ந்து எல்லாப்பிரிவினரிடை (சிறுவர், இளையோர் முதியோர்) யேயும் ஆன்மீகத்தில் பாரிய முன்னேற்றத்தை அவதானிக்கக்கூடியதாயுள்ளது.

அண்மைக்காலத்தில் தமிழ், ஆங்கில நூல்களைக்கொண்ட ஒரு நூலகம் ஏற்படுத்தப்பட்டு வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க நூல்களை இரவல் கொடுக்கும் பகுதி ஆரம்பிக்கப்பட்டது. இதனால் கத்தோலிக்கர் நூல்களை ஆவலுடன் பெற்று வாசிக்கும் பழக்கம் ஏற்பட்டு புரட்டஸ்தாந்து வெளியீடுகளில் கத்தோலிக்க சமயத்திற்கெதிராக வெளிவரும் பிரசாரங்களுக்குத்தகுந்த பதில்களைப்பெறவும் இந்நூல்கள் வாசிப்பு உதவுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இரண்டு கத்தோலிக்க ஆங்கிலப்பாடசாலைகள் உள்ளன. இவற்றுக்கு வருடமொன்றுக்கு அரசாங்கம் 200 ஸ்டேர்லிங் பவுண்கள் உதவியாக வழங்குகின்றது. பிரித்தானிய அமல மரித் தியாகிகள் சபையைச்சேர்ந்த அருட்சகோதரர்கள் இதனை நடத்துகின்றனர். பத்து விடுதி மாணவர்கள் உட்பட 89 மாணவர்கள் இங்கு கல்வி பயில்கின்றனா் இப்பாடசாலையுடன் இணைந்ததாக நற்பணிகளில் நாட்டம் கொண்ட மாணவர்களுக்காகப் புனித வளனார் பக்திச்சபை ஏற்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்துப் பெண்பிள்ளைகளைப் பொறுத்தளவில் திருமதி. ப்ளனகன் (Mrs.Flanagan) என்பவரது திறமையான வழிநடத்தலில் ஒரு பாட-


**அருட்பணி S.V.B. மங்களராஜா**

சாலை இயங்குகின்றது. இங்கு ஆங்கிலப்பிரிவில் 12 விடுதி மாணவிகள் உட்பட 33 மாணவியர் கல்வி கற்கின்றனர். தமிழ் மாணவியர்களின் எண்ணிக்கை 71 ஆகும். பாடசாலையுடன் இணைந்ததாக உள்ள காப்பகத்தில் 53 ஐரோப்பிய தமிழ்ப்பிள்ளைகள் உள்ளனர். (இந்தப்பாடசாலைதான் 1863ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி ஆயர் செமேரியாவினால் ஐரோப்பாவில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள 6 (போர்டோ) திருக்குடும்பக் கன்னியர் சபை அருட்சகோதரிகள் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. இதற்காக 4 ஏக்கர் பரப்புள்ள ஒரு காணி 615 ஸ்டேர்லிங் பவுண்களுக்கு வாங்கப்பட்டு ஒரு கன்னியர் மடம், பாடசாலைகள் மற்றும் அனாதைச்சிறுவர் காப்பகம் ஆகியவை அங்கு அமைக்கப்படவுள்ளன. இலங்கை முழுவதிலிருந்து இதற்கென அன்பளிப்புக்கள் பெறப்படுகின்றன. இதுவரையில் 447 ஸடேர்லிங் பவுண்கள் கிடைத்துள்ளன. *(தொடரும்....)*

## இளையோரின்– நல்வாழ்வுக்கு சிறியேன் தரும் சிந்தனைகள்

தத்துவ ஞானம் புத்துயிர் பெற வேண்டும்
இளையோரின் இதயத்திலே
சத்திய மாமறையை நித்தமும் ஏற்று வாழ்வீர்!
ஓர் அணிநின்று தரணி மீதினிலே
எத்தனை துன்பங்கள் எதிர் வந்த போதிலும்
விசுவாசக் கேடயம் விலகிடக் கூடாது
அத்தனை நாளும் உத்தமர் இயேசுவின்
வார்த்தையை வாழ்வாக்கி வாழ்ந்திடுவீர்!
போட்ட விதை முளைக்கும் பொன்னான
தமிழ் மண்ணில்
வாட்டமில்லாப் பயிராக வடிவம்
எடுத்து வந்தீரே!
பல்லாண்டு பல்லாண்டு பக்குவமாக
வாழ்ந்த இனம்
எல்லாமே இழந்து நிற்கும்
எம்மவர்க்குக் கைகொடுப்பீர்!
நாடு நலம் பெற நம் வீடுகள் வளம் பெற
நன்மைகள் செய்திடுவீர்!
கேடுகள் மறைந்திட கீழ்நிலைகள் மாற்றம் பெற
நாடுவீர் இறைஞானத்தை
நல்ஒளி பரவுதல் போல் நம் சூழமைவுகளில்
ஒளியாய் நின்று
இல்லத்தில் மட்டுமல்ல மக்கள் வாழும் இடங்களிலே
நல் வழியைக் காட்டி
செல்லுங்கள் உங்கள் வாழ்க்கை திரைபோட்டு
மறைப்பதற்கல்ல
பாடுகள்பட்டு நீதியுடன் உழைப்பவர்க்கெல்லாம்
பரமனின் வீடு வரும்
மனிதக் கூடுகளில் இறை ஆவி புகுந்து
நன்மைகள் கோடி வரும்
உங்கள் செயல் கண்ட மக்கள்-இறைதந்தையை
அறியும்வண்ணம் - உங்கள் ஒளி வளர்ந்து பிரகாசிக்க!
வான்தந்தையின் மாட்சியின் மகிமையை
மக்கள் அனைவரும் வாழ்த்திப் போற்றட்டும்!
வாழ்க! இளையோரின்
ஆன்மீகம் கலந்த சமூகப்பணி

**வன்னிவாழ் இதயம்**
**ம.சூசைமுத்து**



# தேசியவாதத்தின் தாக்கம்

### யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

**இலங்கையில் தேசியவாதத்தின் எழுச்சி**

இலங்கை சுதந்திரம் பெற்ற 1948 ஆம் ஆண்டில் இருந்து மாறி மாறி நான்கு வருடங்களுக்கு ஒரு முறை ஆட்சிக்கு வந்த அரசியல்வாதிகள் சிங்கள இன வாதிகளின் செல்வாக்கையே தமது ஆட்சியின் இருப்பிற்குப் பலம் சேர்க்கப் பயன்படுத்தினார். ஏனெனில் கல்வியும் வேலைவாய்ப்பும், மதமும் மொழியும் தேசிய பண்பாடு என்னும் அம்சங்களுக்கிடையே ஏற்பட்ட போட்டியைத் தமது பாதுகாப்பற்ற தன்மையாகச் சிங்கள இனவாதிகள் பிழையாக விளங்கிக் கொண்டனர். ஆட்சியாளர்களால் இந்த இனவாதம் தமது சுயநல நோக்கங்களுக்காகத் தூண்டி விடப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது.

**கல்வியும் வேலைவாய்ப்பும்**

பெரும்பான்மைச் சிங்களவர்கள் மத்தியிலும் சிறுபான்மைத் தமிழர்கள் மத்தியிலும் ஐந்து வீதம் முதல் ஆறு வீதமான மாணவர்கள் மட்டுமே காலனித்துவ ஆட்சியில் தாம் பெற்ற ஆங்கிலக் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக் காரணமாக, அதன் பின் வந்த காலங்களில் ஆங்கில அறிவுடையவர்களாகவும், அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்களாகவும், அரசியல் வாதிகளாகவும் விளங்கினர். இதனால் ஏனைய 95 வீதமானோர் தாம் புறம்தள்ளப்பட்டவர்கள் என்னும் உணர்வில் தமது கையாலாகத் தன்மையை உணர்ந்தனர். சிறுபான்மைத் தமிழர்களிலும் பார்க்கப் பெரும்பான்மைச் சிங்களவர்கள் மத்தியிலேயே இவ்வுணர்வு மேலோங்கி நின்றது. வேலை தேட முடியாமைக்குப் பெரும்பான்மை இனத்தவர்களால் முன்வைக்கப்பட்ட மிகவும் சுலபமான விளக்கம் யாதெனில், தமிழர் வலுக்கட்டாயமாகவும் செல்வாக்கைப் பயன்படுத்தியும் தந்திரமான முறையிலும் தம மவர்களை வேலைக்கு அமர்த்தி விடுகின்றனர் என்பதாகும். புத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்பகுதியில் வாழ்ந்த தமிழர் போதிய செழிப்பு மிக்க விவசாயக் காணிகளைச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கவில்லை வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர் அரசாங்க வேலையைக் கௌரவமிக்கதாகவும் கூடிய சீதனவளம் தருவதாகவும் கருதினர். அத்துடன் கத்தோலிக்கப் பாடசாலைகளில் போதிய ஆங்கில அறிவுடன் கல்வி கற்கும் சந்தர்ப்பங்களையே பெருமையாகவும், எதிர்கால வாழ்வின் மூலதனமாகவும் தமிழர் கருதியமையால், கொழும்பிலும் அதன் சுற்றுப் புறம் எங்கும் பெருந்தொகையான தமிழர் இலகுவில் வேலைக்கு அமர்ந்து குடியிருந்தனர். அவ்வாறான ஒரு சூழ்நிலையிலேயே 'பிள்ளை' குடும்ப

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

மும் தென்னிலங்கையைத் தமது வாழ்விடமாகக் கொண்டதாகவும், தென்பகுதிக் கலாசாரத்தையும் தம்மோடு இணைத்துக் கொண்டதாகவும் விளங்கியது.

**மதமும் மொழியும் தேசியப் பண்பாடும்**

காலனித்துவ ஆட்சியின் முடிவில் இலங்கையில் அரச, தனியார் நிறுவனங்கள், மற்றும் அரசியல் தொடர்பான விடயங்கள் அனைத்தும் ஆங்கில மொழியிலேயே மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் 95 வீதமான இலங்கை வாழ் தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கி இனத்தவர் ஆங்கில அறிவு அற்றவர்களாக, தமது தாய்மொழி மட்டும் தெரிந்தவர்களாக இருந்தனர். இதனால் ஒரு மில்லியன் இலங்கைத் தமிழரும், ஒரு மில்லியன் மலையகத் தமிழரும், தென்இந்தியாவிலுள்ள ஐம்பது மில்லியன் தமிழருடன் இணைந்து ஆறு மில்லியன் சிங்களவர்களை எதிர்க்கும் நிலை வரலாம் என்னும் தவறான எண்ணக்கருவே பெரும்பான்மையினர் மத்தியில் பாதுகாப்பற்ற அச்ச நிலைமையை உருவாக்கியது. இந்த அடிப்படைப் பயத்தால் "இலங்கை ஓர் சிங்கள பௌத்த நாடு" என்னும் தனிமுதல்வாதக் கொள்கை 1956 முதல் வலியுறுத்தப்பட்டது. ஏனெனில் இலங்கையின் மொத்தச் சனத் தொகையில் கிறிஸ்தவர்கள் 08வீதமாகக் (பெரும்பாலும் கத்தோலிக்கர்களாக) காணப்பட்டனர். பௌத்தர்கள் 65 வீதமாகவும் இந்துக்கள் 18 வீதமாகவும் முஸ்லீம்கள் 07 வீதமாகவும் இருந்தனர்.

**தமிழரின் எதிர்ப்பும், தமிழ் தேசியவாதமும் சிங்கள மொழியும் பௌத்த நாடும்**

இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் சிங்கள மக்களாக இருந்தால் இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்ற எண்ணக்கரு 1956இல் தேர்தலில் முன்வைக்கப்பட்டபோது தமிழ்த்தலைவர்களினதும் தமிழ் மக்களினதும் சிந்தனை வேறுபட்டிருந்தது. இலங்கையின் சுதந்திரத்திற்காக ஏனைய அரசியல் தலைமைகளோடு இணைந்து தோளோடு தோள் நின்று போரிட்ட தமிழ் அரசியல் தலைவர்கள் சிங்கள மக்களோடு ஒற்றுமையாக வாழ முற்பட்டு 1956வரை சிங்களத் தலைவர்களுடன் ஒன்றிணைந்து ஓரணியில் உழைத்தனர்.

பிரித்தானிய ஆட்சிக்கால ஆரம்பத்தில் இருந்து நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் வந்த பத்து ஆண்டுகள் வரை அரசு மற்றும் தனியார் சமய சமூகக் கட்டமைப்புக்களில் பெரும்பாலான தமிழர்கள் உயர் பதவிகளைப் பெற்றிருந்தமை, தமிழர்களின் கல்வித் தகமைக்கும், திறமைக்கும், உழைப்புக்கும், விடாமுயற்சிக்கும் கிடைத்த சான்றாகும். ஒரு காலத்தில் கொழும்பு, தமிழர்களின் தலைநகரம் என்று சொல்லப்படும் அளவிற்குத் தமிழர் அதன் பகுதியில் செறிந்திருந்தனர்.

(தொடரும்....)




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(அருள், யாழ்ப்பாணம்)*

**கே: தங்களை அண்மையில் பாதித்த விடயம் ஒன்றைக் கூறமுடியுமா?**

**ப:** அருள், கொழும்பு 'சினமன்' உல்லாசப் பயணிகள் விடுதியில் அமைந்துள்ள உணவகத்தில் ஓர் அறிவித்தலை ஒருவர் படம்பிடித்து வலைத்தளத்தில் பகிர்ந்திருப்பதைப் பார்த்தேன். அப்படத்தின் படி, ஒவ்வொரு நேரச் சாப்பாட்டின் பின்னரும் எத்தனை கிலோ உணவு வீணாக்கப்படுகின்றது என்பதை எழு-திப் போடுகின்றார்கள். அவ்வறிவித்தல் பலகையின் பொதுத் தலைப்பு: 'ஐந்து நிமிடங்களுக்கு ஒரு குழந்தை பசியி-னால் இறக்கின்றது' என்பதாகும். இவ்வாறு எழுதப்படும் நாட்களில் ஒன்றான கடந்த யூலைமாதம் 28ம் திகதி, மதிய விருந்தின் பின், ஒன்பதரைக் கிலோ உணவு விரயம் செய்யப்பட்டதாகவும் அதனைக் கொண்டு 27 பிள்ளைகளுக்கு உணவூட்ட முடியும் என்றும் எழுதி வைத்திருக்கின்றார்கள் அந்த உணவகத்தின் உரிமையாளர் (கள்)! எல்லாரும் விழித்துக்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விடயம். எல்லோரும் கைக்கொள்ள வேண்டிய, கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று. வீட்டிலோ, வெளியிலோ, வேண்டியதை உண்ணலாம். ஆனால், ஏன் வீண்விரயம் செய்கின்றார்கள் என்பதைத்தான் விளங்கிக்கொள்ள முடியாதிருக்கின்றது! உணவைப் போன்றுதான் நீரிலும் நாம் அதிக கவனம் செலுத்தவேண்டும்! 'தண்ணீரை: தாத்தா ஆற்றில் பார்த்தார், அப்பா கிணற்றில் பார்த்தார், நாம் குழாயில் பார்க்கின்றோம், மகன் போத்தலில் பார்க்கின்றான், பேரன் எங்கு பார்ப்பானோ!' என ஓரிடத்தில் எழுதப்பட்டிருந்தது. நீரை எவ்வளவு கவனமாகப் பயன்படுத்த வேண்டும் என்பது இதிலிருந்து புரிய வேண்டும்!

*(இந்து, யாழ்ப்பாணம்)*

**கே: 'எல்லாம் சரியாகிவிடும், எல்லாம் சரியாகிவிடும்' எனது தாத்தா அடிக்கடி கூறுகின்றார். அவரின் இந்தக் கூற்று சிலவற்றுக்குச் சரியாகின்றது. பலவற்றுக்குப் பொருந்துவதாய்த் தெரியவில்லை. உண்மையில், 'எல்லாம்சரியாகிவிடும்' என்பது சரியாகுமா?**

**ப:** இந்து, 'கொஞ்சம் வளர்ந்தா எல்லாம் சரியாகிவிடும். வேலைக்குப் போனால் எல்லாம் சரியாகிவிடும். கல்யாணம் பண்ணினா எல்லாம் சரியாகிவிடும். குழந்தை பிறந்தால் எல்லாம் சரியாகிவிடும். இப்படிச் சொல்லுறவங்களைத் தூக்கிப்போட்டு மிதிச்சா எல்லாம் சரியாகிவிடும்!' என்றொரு வாசகம்தான் என் நினைவுக்கு உடனடியாக வருகின்றது. 'எல்லாம் சரியாகிவிடும்' என்ற 'உள்ளூர் தாத்தா பாட்டி சிகிச்சைமுறை' சில விடயங்களுக்கும், சில ஆட்களுக்கும் சரியாகிவிடும்! ஆனால், சரிப்படுத்த வேண்டியதைச் சரிசெய்யாமல், 'சரியாகிவிடும் சரியாகிவிடும்' என விட்டுவிட்டால் அது சரியாகாது - சரிப்பட்டும் வராது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்!

*(விது, மன்னார்)*

**கே: கேள்வி பதில் சுப்பரோ சுப்பர். ஆனால், கொஞ்சமாக எழுதுகின்றீர்கள், இன்னும் கொஞ்சம் கூட எழுதலாமே!?**

**ப:** விது, 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.' முன்னோரின் பழுத்த அனுபவ மொழியை கடைப்பிடிப்பது வாசகர்களை எழுத்தாளனோடு கட்டிவைத்திருக்க ஏதுவாயிருக்கும்! இது ஒருபுறமிருக்க, நீங்கள் கேள்விகளை அனுப்பிவைத்தால்தானே நான் பதில்களைப் பகிரமுடியும்! மேலும், 'கொஞ்சமாக எழுதுகின்றீர்கள், இன்னும் கொஞ்சம் கூட எழுதலாமே!' என்று கூறுகின்ற நீங்களே இன்னுமொரு சந்தர்ப்பத்தில், 'நல்லா எழுதுகின்றீர்கள், கொ-ஞ்-ச-ம் குறைத்து எழுதினால் இன்னும் நன்றாக இருக்கும்!' என்றும் எழுத வாய்ப்பிருக்கின்றது. இவை எல்லாவற்றையும் கருத்தில் வைத்துத்தான் எழுதுகின்றேன், இந்து.

*(அமல், யாழ்ப்பாணம்)*

**கே: 'அன்புள்ள ஆரியசிங்க' என்ற நூலை வாசித்துக் கொண்டிருக்கின்றேன். அருமையாக இருக்கின்றது. ஒரு காலத்தின் பணியைச் செய்து முடித்திருக்கின்றீர்கள். ஆரியசிங்கங்களுக்கு வாழைப் பழத்தில் ஊசியேற்றுவது போல் நோகாமற் கொள்ளாமல் ஊசியேற்றி இருக்கின்றீர்கள் என்று கொள்ளலாமா?**

**ப:** அமல், 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்றொரு பாடல் இருக்கின்றது. அதுபோல, விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில் நாமும் செயற்படவேண்டிய காலமிது. மற்றையது, பல சிங்கங்களுக்கு நடந்ததே தெரியாது அல்லது தெரியாமலே இருக்கின்றார்கள் அல்லது தெரிய விரும்பாமலும் இருக்கின்றார்கள் அல்லது தெரிந்தும் அதைக் காட்டிக்கொள்ளாமல் இருக்கின்றார்கள். எனவே, நமது பணிகள் இவ்வாறான வகைகளிலும் தொடரவேண்டும் என நினைக்கின்றேன். மேலும், அவர்கள் உணரச் செய்யும் வகையில் நமது அளிக்கைகள் இருக்கவேண்டும். அதனை 'அன் புள்ள ஆரியசிங்க' செய்திருக்கின்றது என நம்புகின்றேன்.


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 07 . 11 . 1936



விண்ணில் 16 . 08 . 2022

### அமரர் பிலிப் அருளானந்தம் [செபமாலை]

பப்பா! எம் பாசமிகு தந்தையே!!
எமைப் பிரிந்து நீங்கள் சென்று
ஆண்டு ஒன்று ஆனதோ!
இன்பத்திலும் துன்பத்திலும் அம்மாவுக்கு உற்றதுணையே
பிள்ளைகள் எம்மைப் பக்குவமாகப் பண்படுத்திப்
பாரினில் எம்மைச் சிறப்பாக்கிய
எம் வாழ்வின் சிற்பியே

பங்குத்தளத்தில் நல் பொது நிலையினராகவும்
தமிழ்ப்பற்றும் சமூகப்பற்றும் மிக்க
சமூக ஆர்வலராகவும் இயற்கையை நேசித்த
எம் அன்புப் பப்பா! உம் உடனிருப்பை
உணர்த்துகிறது உம் பசாம் பாடல்கள்.
*உம் பாதுகாவலியாம் செபமாலைத்தாயின்*
*மடியிலிருந்து எமக்காய் மன்றாடும்.*

எம் இறைவா!
அன்புத்தந்தைக்காக நன்றி கூறுகின்றோம் உமது இன்ப சந்நிதானத்தில்
அமைதியில் இளைப்பாற அருள்கூர்ந்திடும்

**அன்னாரின் ஆன்ம இளைப்பாறுதலுக்காக 16.08.2023 புதன் கிழமை காலை 6.00 மணிக்கு சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இவருக்காக இறைவனுக்கு நன்றி கூறி ஆன்ம இளைப்பாறுதலுக்காக செபிக்க உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

**இல. 36/2, கோயில் வீதி**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

AD -51



## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 30 . 03 . 1947



இறப்பு 14 . 08 . 2022

அமரர்
### வேலாயுதம் இராஜநாயகம்
( ஓய்வு பெற்ற சுகாதார பரிசோதகர்)

பிறப்பிலே இந்துவாய் திருமணத்தில் கிறிஸ்தவனாகி
கிறிஸ்தவப் பண்புகளை உன்னதமாய்
மதித்து வாழ்ந்த - உத்தமரே
உம்பாசப் பண்புகளை என்றும் நாம் மறவோம்
உம்திடீர் மரணம் - எமக்கு
வேதனையைத் தந்தாலும்
இவ்வுலக வாழ்வு நிலையற்றதே -என்பதை
உணர்ந்திடுவோம் உம் நினைவுநாளில்

**வெள்ளாம் போக்கட்டி**
**கொடிகாமம்.**

AD/49

**இவரின் பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**



## 31ம் நாள் நினைவலைகள்

மலர்வு 01 . 08 . 1930



உதிர்வு 11 . 07 . 2023

அமரர்
### பிலிப்புப்பிள்ளை ஜோசேப்
(முன்னாள் ஆயர் இல்ல சாரதி)

அன்புத் தந்தையே இறைவா! திரு.பிலிப்புப்பிள்ளை ஜோசேப் எனும் உம் அடியான் இவ்வுலகில் வாழ்ந்த போது அவருக்கு நீர் கொடுத்த அருட்கொடைகளுக்காகவும், நன்மைத் தனங்களுக்காகவும் நன்றி கூறுகின்றோம். அவர் இவ்வுலகில் உம் மீது அளவில்லா அன்பும், விசுவாசமும் கொண்டு வாழ்ந்தது போல மறுவுலகிலும் முடிவில்லா பேரின்ப இராச்சியத்தில் பங்குகொள்ள வரம் அருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 10.08.2023 வியாழக்கிழமை அன்று காலை 5.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

**44, குருசோ வீதி**
**யாழ்ப்பாணம்.**

AD/48

**இவரின் பிரிவால்**
**துயருறும்**
**குடும்பத்தினர்**

# திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் பிறாயன் உடக்வேயின் யாழ். விஜயம்

# நிகழ்வுகளின் நிழல்கள்


குருநகர் புனித யாகப்பர் ஆலயத் திருவிழா


போரினால் பாதிக்கப்பட்ட மக்களுடன்


புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி


திருச்சிலுவைச் சுகாலை நிலையம்


புனித பத்திரிசியார் கல்லூரி


புனித மடுத்தீனார் குருமடம்



தவத்திரு தோமஸ் அடிகளாரின் கல்லறையில்


கைவர் பௌண்டேஷன் நிறுவனத்தில்


ஊர்காவற்றுறைப் பங்கில்


கரம்பொன் பங்கில்


புனித அன்னாள் ஆலயம், இளவாலை


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


ஓய்வுநிலை ஆயர், குருக்களுடன் - எமில் இல்லம்


ஓய்வுநிலை அருட்சகோதரிகளுடன் - இளவாலை


குருக்கள் துறவியர்களுடன் ஆயர் இல்லத்தில்


முள்ளிவாய்க்காலில் இறந்தோர்க்கான அஞ்சலி


சுனாமி நினைவாலயம்


திருமறைக்கலாமன்றக் கலைத்தூது ஓவியக்கூடம்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு ஆவணி மாதம் 06ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.